**ஆகஸ்ட் – 22**

# TNPSC துளிகள்

- இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனமானது, அதன் அரியானா மாநில பானிபட் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் நிலையான விமான எரிபொருள் (SAF) உற்பத்திக்கான CORSIA திட்டத்தின் கீழ் சர்வதேச நிலைத்தன்மை மற்றும் கார்பன் சான்றிதழ் (ISCC) பெற்ற முதல் இந்திய நிறுவனமாக மாறியது.
- ஜெர்மனியின் வின்சென்ட் கீமர், 2025 ஆம் ஆண்டு குவாண்ட்பாக்ஸ் சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் பட்டத்தினை வென்று, முதல் தனிநபர் சாம்பியனாகவும், அவர் மேலும் உலகின் முதல் 10 நேரடி மதிப்பீடுகளில் இடமும் பெற்றார்.
- இந்தியாவின் 79வது சுதந்திரத் தினத்தன்று சியாட்டிலின் ஸ்பேஸ் நீடில் எனும் 605 அடி உயரத்திலான கட்டிடத்தின் உச்சியில் முதன்முறையாக இந்திய மூவர்ணக் கொடி ஏற்றப் பட்டதுடன் இது அந்த இடத்தில் முதன்முறையாக ஏற்றப்பட்ட முதல் வெளிநாட்டுக் கொடியாக மாறியுள்ளது.
- இராஜஸ்தானின் மணிகா விஸ்வகர்மா 2025 ஆம் ஆண்டிற்கான பிரபஞ்ச அழகி - இந்தியப் பட்டத்தினை வென்றார்.
- ஃபாக்ஸ்கான் நிறுவனமானது, கர்நாடகாவின் பெங்களூருக்கு அருகிலுள்ள அதன் தேவனஹள்ளி மையத்தில் ஐபோன் 17 ரக கைபேசிகளின் உற்பத்தியைத் தொடங்கி உள்ளது.
  - இந்த உற்பத்தி அலகு ஆனது, சீனாவிற்கு வெளியே வேறொரு நாட்டில் 2.8 பில்லியன் டாலர் (25,000 கோடி ரூபாய்) முதலீட்டில் ஃபாக்ஸ்கான் நிறுவனம் நிறுவிய இரண்டாவது பெரிய உற்பத்தி அலகு ஆகும்.
- குக்கா நௌமி என்பது இராஜஸ்தான், ஹரியானா, பஞ்சாப், ஜம்மு & காஷ்மீர் மற்றும் உத்தரப் பிரதேசம் முழுவதும் கொண்டாடப்படும் ஒரு நாட்டுப்புறச் சமய விழாவாகும்.
  - இது பத்ரபாத மாதத்தில் கிருஷ்ண பக்சத்தின் ஒன்பதாம் நாளில், பொதுவாக ஜன்மாஷ்டமிக்குப் பிறகு கொண்டாடப்படுகிறது.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## மன்னார் வளைகுடாவில் பவளப்பாறைகளின் தோற்றம்

- 1960 ஆம் ஆண்டுகளில் இருந்து நிகழ்ந்து வரும் பருவநிலை மாற்றம் மற்றும் பவளப் பாறை அகழ்ந்தெடுப்பு போன்ற மனித நடவடிக்கைகளால் மன்னார் வளைகுடாவில் உள்ள பவளப்பாறைகள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன.
- சுகந்தி தேவதாசன் கடல் ஆராய்ச்சி நிறுவனம் (SDMRI) மற்றும் தமிழ்நாடு வனத் துறையைச் சேர்ந்த அறிவியலாளர்கள் 20 ஆண்டுகளுக்கும் மேலாக வருடாந்திரக் கடலடிப் பவளப்பாறை மீளுருவாக்க ஆய்வுகளை நடத்தி வருகின்றனர்.
- 20 இனங்களைச் சேர்ந்த மொத்தம் 51,183 பவளப் பாறைத் துண்டுகள் 5,550 செயற்கை அடித்தள மூலக்கூறுகளில் உட்புகுத்தப் பட்டன.
- இது சுமார் 40,000 சதுர மீட்டர் அளவிலான சிதைந்த பவளப் பாறைப் பகுதியை மீட்டெடுத்தது.
- நடவு/இடமாற்றம் செய்யப்பட்ட பவளப் பாறைகளின் உயிர்வாழ்வு விகிதங்கள் 55.6% முதல் 79.5% வரை இருந்தன.
- அக்ரோபோரா இன்டர்மீடியா இனமானது, ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அதிக உயிர்

வாழ்வு (89.1%) மற்றும் வளர்ச்சி விகிதம் (ஆண்டிற்கு 16.7 செ.மீ) ஆகியவற்றினை வழங்கியுள்ளது.

- ❖ 2015 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், 10,600 செயற்கைப் பவளப் பாறை தொகுதிகள் (முக்கோணச் செயற்கைப் பவளப் பாறை - TAR மற்றும் துளைகளிடப்பட்ட சரிவக வடிவ செயற்கைப் பவளப் பாறை - PTAR) பயன்படுத்தப்பட்டன.
- ❖ இது PTARகளில் 2004 ஆம் ஆண்டில் 1.23 ஆக இருந்த பவளப்பாறைச் சேர்ப்பு அடர்த்தியை 2020 ஆம் ஆண்டில் 76.01 ஆக அதிகரித்தது.
- ❖ மீளுருவாக்கப்பட்ட இடங்களில் 2006 ஆம் ஆண்டில் 2.7% ஆக இருந்த உயிர்ப்பு பெற்றப் பவளப்பாறைகள் 2020 ஆம் ஆண்டில் 18.8% ஆக அதிகரித்தது என்ற நிலையில் இது மீட்டெடுக்கப்பட்ட இடங்களில் 1.8% ஆக மட்டுமே இருந்தது.
- ❖ மீளுருவாக்கப்பட்ட இடங்களில் 2006 ஆம் ஆண்டில் 14.5 ஆக இருந்த மீன் எண்ணிக்கையின் அடர்த்தியானது 2020 ஆம் ஆண்டில் 310.0 ஆக வியத்தகு வகையில் உயர்ந்தது.
- ❖ வான் தீவில் 63 மீன் இனங்களுக்கும், கோஸ்வரி தீவில் 51 இனங்களுக்கும் அவை வாழ்விடமளிக்கின்றன.
- ❖ 8,500 செயற்கைப் பவளப் பாறைத் தொகுதிகளை நிறுவச் செய்யவும், தரமிழந்த பவளப் பாறைகள் மற்றும் கடல் புல் படுக்கைகளை மீட்டெடுக்கவும் தமிழ்நாடு அரசு தமிழ்நாடு பெருங்கடல் வளங்களை நிலையான முறையில் பேணுதல் (TNSHORE) என்ற திட்டத்தைத் தொடங்கியது.




## முதலமைச்சரின் மாநில இளையோர் விருது 2025


- ❖ நடப்பு கேரம் உலக சாம்பியன் M. காசிமா, 2025 ஆம் ஆண்டு முதலமைச்சரின் மாநில இளையோர் விருதை வென்றார்.
- ❖ 2025 ஆம் ஆண்டின் தமிழ்நாடு முதலமைச்சரின் மாநில இளையோர் விருது, சமூக மேம்பாட்டிற்கு அவர்கள் ஆற்றிய தன்னார்வப் பங்களிப்புகளுக்காக 15 முதல் 35 வயதுடைய இளையோர்களை அங்கீகரிக்கிறது.
- ❖ இந்த விருதில் 1,00,000 ரூபாய் ரொக்கப் பரிசு, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பதக்கம் ஆகியவை அடங்கும்.

- அரசு ஊழியர்கள் மற்றும் கல்வி நிறுவன ஊழியர்கள் இந்த விருதினைப் பெற தகுதி அற்றவர்கள் ஆவர்.




## தேசியச் செய்திகள்

### ப்ளுமேரியா தோட்டத்தின் திறப்பு விழா




- புது டெல்லியில் உள்ள இராஷ்டிரபதி பவனில் உள்ள அம்ரித் உத்யானில் அமைக்கப் பட்டுள்ள ப்ளுமேரியா தோட்டம், ஆலமரத் தோப்பு மற்றும் துள்ளி ஓடும் ஓடை ஆகியவற்றைக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு திறந்து வைத்தார்.
- இந்தப் புதிய தோட்டங்கள் ஆனது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 ஆம் தேதி வரை

பொதுமக்களின் பார்வைக்காகத் திறக்கப்பட்டிருக்கும்.

- ப்ளூமேரியா தோட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட செடிகள் மற்றும் புல் படுக்கைகளைக் கொண்டுள்ளது.
- ஆலமரத் தோப்பில் பாத அழுத்தச் சிகிச்சை நடைபாதைகள், பஞ்சத்வ பாதைகள் மற்றும் காடுகளை ஒத்த ஒலிக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன.
- துள்ளி ஓடும் ஓடைகளில் சிற்ப வேலைபாடுகள் கொண்ட நீர்க் குழாய்கள், படிக் கட்டுகள் மற்றும் ஒரு பிரதிபலிப்பு குளம் ஆகியவற்றை கொண்டுள்ளது.

## இந்தியாவின் நிலவு ஆய்வுத் திட்டம்





- 2040 ஆம் ஆண்டிற்குள் இந்தியா நிலவில் ஒரு விண்வெளி வீரரை தரையிறக்கும் என்று இந்தியப் பிரதமர் அறிவித்தார்.
- பாரதிய அந்தரிக்சா நிலையம் (விண்வெளி நிலையம்) ஆனது 2035 ஆம் ஆண்டிற்குள் தயாராகிவிடும் என்று அவர் கூறினார்.
- செவ்வாய் மற்றும் வெள்ளி ஆய்வுப் பணிகளும் இந்தியாவின் விண்வெளி செயல் திட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ளன.
- இந்தியாவின் முதல் மனித விண்வெளிப் பயணமான ககன்யான் 2027 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஏவப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

## சுற்றுலா குறித்த தொலைநோக்குக் கொள்கை 2047

- இந்தியாவின் சுற்றுலாத் துறையானது வேலைவாய்ப்பை 50 மில்லியனிலிருந்து 200 மில்லியன் வேலைகளாக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது.
- 2047 ஆம் ஆண்டு சுற்றுலா குறித்த தொலைநோக்குக் கொள்கையின் செயல் திட்டமானது 3 டிரில்லியன் டாலர் மதிப்பிலான சுற்றுலாப் பொருளாதாரத்தை எட்டுவதை இலக்காகக் கொண்டுள்ளது.
- இது இந்தியாவிற்கு 100 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதையும் 20 பில்லியன் உள்நாட்டுச் சுற்றுலா வருகைகளை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டு

உள்ளது.

- ❖ இந்தியச் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் சங்கங்களின் கூட்டமைப்பின் (FAITH) கீழ் தேசிய சுற்றுலா மாநாடு நடைபெற்றது.
- ❖ இந்தத் துறையானது, 2047 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதன் பங்களிப்பை 5 சதவீதத்திலிருந்து 10% ஆக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## இந்தியாவில் நீர்ப் பற்றாக்குறை உள்ள மாவட்டங்கள்


- ❖ மத்திய நிலத்தடி நீர் வாரியம் (CGWB) மற்றும் மாநில அரசுகள் ஆனது, 2022 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் மாறி வரும் நிலத்தடி நீர் வளங்களை மதிப்பிட்டுள்ளன.
- ❖ 2024 ஆம் ஆண்டு CGWB அறிக்கையின்படி, 102 மாவட்டங்களின் நிலத்தடி நீர் வளங்கள் அதிகமாகச் சுரண்டப்படுகின்றன என்ற நிலையில் அவற்றில் 22 அபாய நிலையில் உள்ளது மற்றும் 69 மாவட்டங்கள் ஓரளவு அபாய நிலையிலும் உள்ளன.
- ❖ ஜல் சக்தி அமைச்சகம் ஆனது, 256 நீர்ப் பற்றாக்குறை உள்ள மாவட்டங்களை இலக்காகக் கொண்டு, 2019 ஆம் ஆண்டில் ஜல் சக்தி அபியான் (JSA) திட்டத்தினைத் தொடங்கியது.
- ❖ JSA Catch the Rain (CTR) பிரச்சாரம் ஆனது 2021 ஆம் ஆண்டில் தொடங்கி ஒவ்வோர் ஆண்டும் சிறப்பு கவனம் செலுத்தப்படும் மாவட்டங்களுடன் நாடு தழுவிய அளவில் விரிவுபடுத்தப்பட்டது.
- ❖ 2023 JSA CTR ஆனது, ஜல் ஜீவன் திட்டத்தினால் அடையாளம் காணப்பட்ட 150 மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளித்தது.
- ❖ 2024 ஆம் ஆண்டு பிரச்சாரம் ஆனது, நாரி சக்தி சே ஜல் சக்தி என்ற கருத்துருவின் கீழ் CGWB வாரியத்தினால் அடையாளம் காணப்பட்ட 151 மாவட்டங்களில் கவனம் செலுத்தியது.
- ❖ 2025 ஆம் ஆண்டு JSA CTR பிரச்சாரம், CGWB வாரியத்தினால் அடையாளம் காணப்பட்ட 148 மாவட்டங்களை இலக்காகக் கொண்டு, அடிமட்டப் பங்கேற்பு மற்றும் புதுமையான நிதியுதவிக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

- 2025-2026 ஆம் ஆண்டு பிரச்சாரத்திற்காக 148 மிகவும் அதிக கவனம் செலுத்தப்படும் மாவட்டங்களுக்கு மொத்தம் 148 மத்தியத் தலைமை அதிகாரிகள் நியமிக்கப் பட்டு உள்ளனர்.

| S.No. | State/Union Territories | No. of Over-Exploited | No. of Critical Districts | No. of Semi-Critical Districts | Total no. of OCS Districts |
|---|---|---|---|---|---|
| 1 | Bihar | 0 | 0 | 2 | 2 |
| 2 | Chhattisgarh | 0 | 1 | 3 | 4 |
| 3 | Gujarat | 4 | 0 | 2 | 6 |
| 4 | Haryana | 16 | 1 | 2 | 19 |
| 5 | Jharkhand | 0 | 0 | 1 | 1 |
| 6 | Karnataka | 5 | 4 | 5 | 14 |
| 7 | Kerala | 0 | 0 | 2 | 2 |
| 8 | Madhya Pradesh | 6 | 1 | 6 | 13 |
| 9 | Maharashtra | 0 | 0 | 5 | 5 |
| 10 | Punjab | 19 | 1 | 0 | 20 |

# சர்வதேசச் செய்திகள்

## ரூபெல்லா பாதிப்பு ஒழிப்பு – நேபாளம்




- நேபாள நாடானது ஒரு பொது சுகாதாரப் பிரச்சினையாக விளங்கிய ரூபெல்லா பாதிப்பினை ஒழித்துள்ளதாக உலக சுகாதார அமைப்பினால் உறுதிப்படுத்தப் பட்டு உள்ளது.
- 2012 ஆம் ஆண்டில் நேபாளத்தின் நோய்த் தடுப்பு திட்டத்தில் ரூபெல்லா தடுப்பூசியானது அறிமுகப்படுத்தப்பட்டது.
- ரூபெல்லா என்பது கர்ப்பிணிப் பெண்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதால் பிறக்கும் குழந்தைகளில் கடுமையான பிறப்புக் குறைபாடுகளை ஏற்படுத்தும் ஒரு தொற்று தன்மை மிக்க வைரஸ் தொற்று ஆகும்.

- 2024 ஆம் ஆண்டில், நேபாளத்தின் 95 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் ரூபெல்லா தடுப்பூசியின் ஒரு தவணையையாவது பெற்றிருந்தனர்.
- WHO அமைப்பின் தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் ரூபெல்லா ஒழிப்பினை எட்டிய ஆறாவது நாடு நேபாளம் ஆகும்.
- தென்கிழக்கு ஆசிய பிராந்தியம் ஆனது 2026 ஆம் ஆண்டுக்குள் தட்டம்மை மற்றும் ரூபெல்லா பாதிப்பினை ஒழிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

### சகுரா அறிவியல் திட்டம் 2025




- சகுரா அறிவியல் திட்டம் ஆனது, ஜப்பான் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தால் (JST) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இளைஞர்களிடையே அறிவியல் கற்றல் மற்றும் கலாச்சாரப் பரிமாற்றத்தை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2016 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தில் இணைந்த இந்தியா, அந்த ஆண்டு முதல் 619 மாணவர்களையும், 91 மேற்பார்வையாளர்களையும் ஜப்பானுக்கு அனுப்பியுள்ளது.
- 2025 ஆம் ஆண்டில், அந்தமான் & நிக்கோபார், லடாக், மிசோரம், நாகாலாந்து மற்றும் திரிபுராவில் உள்ள ஜவஹர் நவோதயா வித்யாலயாக்கள் மற்றும் அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 34 இந்திய மாணவர்களும், 2 மேற்பார்வையாளர்களும் ஜப்பானுக்குப் பயணிக்க உள்ளனர்.


## பொருளாதாரச் செய்திகள்

### மாநிலங்களின் நிதிநிலை அறிக்கைக் கணக்கின் வரவு சாராக் கடன்கள்

- 2024 ஆம் நிதியாண்டில் 21,251 கோடி ரூபாயாக இருந்த நிதிநிலை அறிக்கைக் கணக்கின் வரவு சாராக் கடன்கள் (OBB) 2025 ஆம் நிதியாண்டில் 29,335 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.
- கோவிட்-19 தொற்றுநோய் காலத்தில், 2021 ஆம் நிதியாண்டில் நிதிநிலை அறிக்கைக்

கணக்கின் வரவு சாராக் கடன்கள் 67,181 கோடி ரூபாயாக உயர்ந்தன.

- 2023 ஆம் நிதியாண்டில் இருந்து மத்திய அரசு அதன் சொந்த நிதிநிலை அறிக்கைக் கணக்கின் வரவு சாராக் கடன் வாங்கும் நடைமுறைகளை நிறுத்தியது.
- மத்திய அரசு ஆனது 2022 ஆம் நிதியாண்டு முதல், 293(3) சரத்தின் கடன் வரம்புகளின் கீழ் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களால் திரட்டப்பட்ட கடனைச் சேர்த்துள்ளது.
- 50 ஆண்டு வட்டி இல்லாத கடன்களை வழங்கும் மத்திய அரசின் மூலதன முதலீட்டுக்கான மாநிலங்களுக்கான சிறப்பு உதவி (SASCI) திட்டத்தை மாநிலங்கள் தேர்வு செய்கின்றன.
- 13 முக்கிய மாநிலங்களின் நிதிநிலை அறிக்கைகள் 2026 ஆம் நிதியாண்டில் 3.2% நிதிப் பற்றாக்குறை இருக்கும் என்று கணிக்கின்றன என்று கேர்எட்ஜ் மதிப்பீடுகள் அறிக்கை கூறுகிறது.
- 2025 ஆம் நிதியாண்டில் மகாராஷ்டிரா 13,990 கோடி ரூபாய் என்ற அளவில் நிதிநிலை அறிக்கைக் கணக்கின் வரவு சாராக் கடன்களைக் கொண்டு முதலிடத்தில் உள்ளது அதைத் தொடர்ந்து 5,438 கோடி ரூபாயுடன் கர்நாடகா உள்ளது.
- தெலுங்கானா மற்றும் கேரளா ஆகியவை முறையே 2025 ஆம் நிதியாண்டில் 2,697 கோடி ரூபாய் மற்றும் 983 கோடி ரூபாய் அளவிலான நிதிநிலை அறிக்கைக் கணக்கின் வரவு சாராக் கடன்களை கொண்டுள்ளன.
- 2024 ஆம் நிதியாண்டில், மகாராஷ்டிராவில் 7,700 கோடி ரூபாய் என்ற அளவில் நிதி நிலை அறிக்கைக் கணக்கின் வரவு சாராக் கடன்கள் இருந்தன அதைத் தொடர்ந்து கேரளா 4,688 கோடி ரூபாய் என்ற அளவில் கொண்டிருந்தது.





- மத்தியப் பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்கள் மத்திய அரசின் நிதிப் பரிமாற்றங்களைப் பெரிதும் சார்ந்துள்ளன.
- ஹரியானா, தெலுங்கானா, கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா போன்ற செல்வ வளம் மிக்க மாநிலங்கள் தங்கள் வருவாய் மூலம் பெரும்பாலான நிதி ஒதுக்கீடுகளுக்கு நிதியளிக்கின்றன.

- மாநில அரசுகள் ஆனது, நிதிப் பற்றாக்குறை இலக்குகளை மீறாமல் நலத் திட்டங்கள் மற்றும் உள்கட்டமைப்புக்கு நிதியளிக்க நிதிநிலை அறிக்கைக் கணக்கின் வரவு சாராக் கடன்களைப் பயன்படுத்துகின்றன.
- 2025 ஆம் நிதியாண்டில் திறந்த சந்தை ஆதாரங்கள் மூலம் மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகியவை தலா 1.2 லட்சம் கோடி ரூபாக்கு மேல் கடன் வாங்கியுள்ளன.

## முதல் காலாண்டில் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி

- 2025-26 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இந்தியாவின் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி 47 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.
- 2014-15 ஆம் ஆண்டில் 31 பில்லியன் டாலராக இருந்த மின்னணுப் பொருட்களின் உற்பத்தி 2024-25 ஆம் ஆண்டில் 133 பில்லியன் டாலராக வளர்ந்தது.
- 2014 ஆம் ஆண்டில் 2 ஆக இருந்த கைபேசி உற்பத்தி அலகுகள் 2025 ஆம் ஆண்டில் 300 க்கும் அதிகமாக அதிகரித்தது.
- இந்தியா உலகின் இரண்டாவது பெரிய கைபேசி உற்பத்தியாளர் ஆக உள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## பேரலல் வெப் சிஸ்டம்ஸ்

- ட்விட்டரின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி பராக் அகர்வால் பேரலல் வெப் சிஸ்டம்ஸ் என்ற புதிய செயற்கை நுண்ணறிவு புத்தொழிலை தொடங்கியுள்ளார்.
- இந்த புத்தொழில் நிறுவனமானது, செயற்கை நுண்ணறிவு முகவர்கள் இணையத்தை நிகழ்நேரத்தில் பயன்படுத்துவதற்கான உள்கட்டமைப்பை உருவாக்குகிறது.

- செயற்கை நுண்ணறிவுகளை இணையத்தின் முதன்மைப் பயனர்களாக உருவாக்குவதை பேரலல் நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## நேக்லேரியா ஃபோவ்லேரி அமீபா




- நேக்லேரியா ஃபோவ்லேரி அமீபா கோழிக்கோட்டில் உள்ள கிணற்று நீரில் கண்டறியப் பட்டுள்ளது.
- நெய்க்லீரியா ஃபோலேரி என்பது ஓர் அரிய, கொடிய அமீபா ஆகும் என்ற நிலையில் இது முதன்மை அமீபிக் மெனிங்கோஎன்செபாலிடிஸ் (PAM) எனப்படும் கடுமையான


மூளைத் தொற்றை ஏற்படுத்துகிறது.

- 2025 ஆம் ஆண்டில் கோழிக்கோடு மாவட்டத்தில் பதிவான மூன்றாவது PAM பாதிப்பு இதுவாகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## அசாம் மாநிலத்தில் அயல் தாவரங்கள்

- புல்வெளி அயல் இனங்கள் அசாமின் திப்ரு-சைகோவா தேசியப் பூங்காவை (DSNP) அச்சுறுத்துகின்றன.
- இந்தியாவில் காட்டுக் குதிரைகளின் ஒரே வாழ்விடமாக DSNP உள்ளது.
- உள்நாட்டுத் தாவரங்களான பாம்பாக்ஸ் சீபா (சிமாலு) மற்றும் லாகர்ஸ்ட்ரோமியா ஸ்பெசியோசா (அஜார்) ஆகியவை அயல் இனங்களுடன் இணைந்து நதிக்கரை சுற்றுச் சூழல் அமைப்பை மாற்றுகின்றன.
- குரோமோலேனா ஓடோரட்டா, ஏஜெரட்டம் கோனிசோயிடுகள், பார்த்தீனியம் ஹிஸ்டெரோபோரஸ் மற்றும் மிகானியா மைக்ராந்தா ஆகியன அயல் தாவரங்களில் அடங்கும்.
- 2000 ஆம் ஆண்டில், DSNP பூங்காவின் 28.78% பரப்பளவில் புல்வெளிகளாகக் காணப் பட்டன ஆனால் 2013 ஆம் ஆண்டில், புதர்களின் பரவல் விரிவடைந்து, புல்வெளிப் பரப்பளவில் குறிப்பிடத்தக்க சரிவை ஏற்படுத்தியது.
- 2024 ஆம் ஆண்டில் தரமிழந்தக் காடுகளின் பரவல் 80.52 சதுர கிலோமீட்டராக (23.47%) அதிகரித்தன, இது பல்லுயிரியலை எதிர்மறையாகப் பாதிக்கிறது.
- புல்வெளி இழப்பு வங்காள வரகுக் கோழி, வராக மான் மற்றும் சதுப்பு நில புல் கீச்சான் உள்ளிட்ட பல உயிரினங்களின் இருப்பினை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்குகிறது.





# முக்கிய தினங்கள்

## உலகப் புகைப்பட தினம் 2025 - ஆகஸ்ட் 19

- புகைப்படக் கலையையும், அதன் ஊக்கமளிக்கக் கூடிய திறன், நினைவுகளைப் பாதுகாக்க மற்றும் மாற்றத்தை உருவாக்கும் ஆற்றலையும் கௌரவிப்பதே இதன்

நோக்கமாகும்.

- 1839 ஆம் ஆண்டு லூயிஸ் டாகுரே என்பவரால் பாதரச ஆவி முறையில் எடுக்கப்பட்ட நிழற்படச் (டாகுரோடைப்) செயல்முறையானது கண்டுபிடிக்கப்பட்டதை இந்த நாள் குறிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "My Favourite Photo" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★